திரு. பெ. மலேச்சாமி : தலைவரவர்களே, குடும்ப நலத்திட்டத்தைச் செம்மையாக நிறைவேற்றச் சித்த வைத்திய முறையில் தெளிவாகச் செய்ய முடியுமென்று சிலர் கருத்து தெரிவித்திருக்கிருர்கள். அது பற்றி அரசாங்கம் என்ன கருதுகிறது

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அரசு பரிசீலனை செய்யும்.

THIRU K. VINAYAKAM : Is the Siddha dispensary in the Secretariat building patronised by our employees? What is the attendance like ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இந்த மருத்துவமனையில், தலைமைச் செயலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட மருத்துவ மனையில் தினம் 130 பேர்கள் சிகிச்சை பெறுகிருர்கள். நாளுக்கு நாள் இந்தஎண்ணிக்கை அதிகமாகிக் கொண்டு வருவதால் இங்கு அனை வரும் அக்கறை காட்டுகிருர்கள், அவர்களுக்கு நம்பிக்கையிருக்கிறது என்பதைத்தான் எடுத்துக் காட்டுகிறது.

திரு. ஹாஜி. ம. மு. பீர் முஹமது : பேரவைத் தலைவர் அவர்களே, பாளையங்கோட்டை மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சித்த வைத்தியத்திற்காக 300-க்கும் மேற்பட்டவர்கள் வருகிருர்கள். சித்த வைத்தியத்திஞல் பயன் அதிகமாயிருக்கிறது. சித்த வைத்தியத்தின்மீது மக்கள் மத்தியில் நம்பிக்கையிருக்கிறது. எனவே, இரண்டு மருத்துவர்கள் உள்ள அரசாங்க மருத்துவமனைகளில் ஒருவரைச் சித்த வைத்திய யூஞனி ஆயுர்வேதிக் பட்டம் பெற்றவர்களைப்போட அரசாங்கம் முயற்சிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இப்போதும் இருக்கிருர்கள், ஆனுல், மேலும் ஆயுர்வேத யூஞனி மருத்துவத்திற்கு மாணவர்களே கிடைக்கவில்லை என்று நேற்றுக் கூட இந்த மானியத்தின் மீது நடந்த விவாதத்தின் போது குறிப்பிட்டேன். சித்த வைத்தியத்தை விரும்பிப் படிப்பதற்குமாணவர்கள் வருகிருர்கள். அதற்கான ஏற்பாடு களுக்குத்தான் பாளையங்கோட்டையிலேகூட வகை செய்யப்பட்டிருக்கிறது.

ஆஸ்டின்பட்டி காச நோய் மருத்துவ மனை.

418 * விஞ : திரு. எஸ். அக்னிராஜு : மாண்புமிகு பொதுச் சுகாதார, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மதுரையை அடுத்த ஆஸ்டின்பட்டி க்ஷயரோக ஆஸ்பத்திரியை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிற்குண்டா ?

(இ) ஆம் எனில், எப்போது மேற்கொள்ளப்படும் ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :

(அ) ஆம்.

(இ) இத் திட்டம் இப்பொழுது மருத்துவக் கல்வி நெறியாளரின் பரிசீலனையில் உள்ளது.

திரு. எஸ். அக்னிராஜு : தலைவரவர்களே, மதுரை தத்தனேரியில உள்ள தொத்துநோய் வைத்தியசாலையை ஆஸ்டின்பட்டிக்குக் கொண்டு வரவேண்டுமென்ற எண்ணம் இருந்தது, அதுபற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

1969 மார்ச் 22]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து ஆஸ்டின்பட்டியில் இருக்கின்ற க்ஷயரோக மருத்துவமனை குறித்துத்தான் இங்கே கனம் உறுப்பினரவர்கள் கேள்வி கேட்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த மருத்துவ மனையை இன்னும் விரிவுபடுத்தும்வகையில், அதிகப்படியான படுக்கை வசதிகளை ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும், 102, 162 படுக்கைகளைக் கொண்ட இரண்டு அடிஷனல் வார்டுகளுக்குப் புதுக் கட்டடங்களைக் கட்டுவிக்க வேண்டுமென்றுதான் செயற்குறிப்பு இருக்கிறது. கனம் அங்கத்தினர் அவர்கள் கோரும் வேறு ஊரைப்பற்றி எந்தக் குறிப்பும் தற்போது என்னிடம் இருக்கவில்லை.

Refresher course in Library Science.

*419. *Q.*—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state :—

(*a*) the reasons for conducting a Refresher course in Library Science in the Connemara Public Library ; and

(*b*) whether the Librarian of the said Library is paid any honorarium for conducting the course and, if so, why ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இம் மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில் உள்ள நூலகங்களில், புத்தகங்களை வகைப்படுத்தல், அட்டவணையிடுதல் ,முறைப்படுத்தல், படிக்கக் கொடுத்தல் முதலியவற்றின் நடைமுறைகளைச் சீரமைக்கவும் மாவட்ட நூலகக் குழுக்களின் கீழ்வரும் நூலகங்களில் நூலக வேலைமுறைகளின் நிலைமையைப் பொதுவாக மேம்படுத்தவும் I-ம் நிலை II-ம் நிலை நூலகக் காப்பாளர்களுக்குப் பொது நூலக வேலைமுறைகளில் நடைமுறைப் பயிற்சியளிக்கும்பொருட்டு, கன்னிமாரா பொதுநூலகத்தில் நூலகக் கலையில் நினைவூட்டுவகுப்பு ஒன்று நடத்தக் கருதப்பட்டுள்ளது,

(இ) இல்லை. இவ்வகுப்பு நடத்த நூலகக் காப்பாளருக்கு மதிப்பூதியம் எதுவும் கொடுப்பதில்லை.

DR. H. V. HANDE: Is it a fact that the University itself offers a good course in Library Science and, if so, will not teaching the refresher course consume a good deal of the time of the Librarian of the Connemara Library and prevent him from doing his normal duties ? In view of this difficulty, will this Government think of appointing somebody else so that the Librarian will be able to look after library work and the work may not suffer for want of supervision ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, பல்கலைக்கழகத்திலும் Diploma in Library Science. பயிற்சி கொடுக்கிறார்கள். இது புத்தகங்களை வகைப்படுத்தல், அடுக்கி வைத்தல் முறைகளைப் பற்றி Grade II Librarian தேவை என்று ஒரு குழு பரிந்துரைருத்திருக்கிறது. அதைக்கருதி ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் நடைமுறைக்குக் கொண்டுவரவில்லை. லைப்ரரியனுக்கு வேலைபளு இருக்காது என்று முடிவு செய்கிறது.

திரு. அ. லெ. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, இன்று நூலகங்களெல்லாம் கல்வியொடு இணைந்திருக்கும் நிலைமைகளைப் பார்க்கிறோம். ஆகவே, கல்லூரிகளிலே படிக்கும் மாணவர்களைப் பகுதிநேர ஊழியர்களாக, லைப்ரரியனாக அமைக்கும் உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பரிசீலிக்கவில்லை.